දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, කච්චේරිය, ත්‍රිකුණාමලය

மாவட்டச் செயலகம், திருகோணமலை

**District Secretariat, Kachcheri, Trincomalee**

# කාර්යසාධන වාර්තාව හා ගිණුම්

## செயற்திறன் பெறுபேற்று அறிக்கையும் கணக்கும்

# PERFORMANCE REPORT AND ACCOUNTS

**2013**



## பொருளடக்கம் பக்கம்


**1.** அரச அதிபரின் செய்தி / முன்னுரை 02
**2.** திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கான ஓர் அறிமுகம்
2.1. எமது தூரநோக்கு , செயற்பாட்டு நோக்கு அறிக்கைகள் 03
2.2. நிறுவன குறிக்கோள்கள் 03
2.3. முதன்மைச் செயற்பாடுகள் 04
**3.** திருகோணமலை மாவட்டம் - ஒரு கண்ணோட்டம் 05
**4.** திருகோணமலை மாவட்டத்தின் வரைபடம் 06
**5.** திருகோணமலை மாவட்டத்தின் புள்ளிவிபர தரவுகள்
5.1. அடிப்படை தகவல்கள் 07
5.2. திருகோணமலை மாவட்டத்தின் இடப்பகிர்வு, கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் சனத்தொகை 07-08
**6.** நிறுவன அமைப்பும் வளங்களும்
6.1. பதவிநிலை உத்தியோகத்தர்களின் விபரம்- மாவட்ட செயலகமும், பிரதேச செயலகமும் 09
6.2. ஒழுங்கமைப்பு வரைபடம் 10
6.3. மனித வள தரவுகள் 11-12

**7.** செயற்பாடுகள்
7.1. பொது நிர்வாகம் மற்றும் தாபனசேவைகளினது முன்னேற்றம்
7.1.1. அனுமதிப்பத்திரத்தினையும் உத்தரவுப்பத்திரத்தினையும் வழங்குதல் / புதுப்பித்தல் (துப்பாக்கி,கள்ளு,ஓபியம்,வெடிபொருள்) 13-15
7.1.2. பிரதேச பதிவு செய்தல் நடவடிக்கைகள் (தே.அ.அ,பிறப்பு,இறப்பு,திருமணம், கடவுச்சீட்டு) 16
7.1.3. ஓய்வூதியக் கொடுப்பனவு விபரங்கள் - 2013 16-17
7.1.4. மனிதவள தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள் 18
7.1.5. காணி நிர்வாகம் 18-19
7.1.6. இடர் முகாமைத்துவ செயற்பாடுகள் 19-20
7.1.7. மாவட்ட புள்ளிவிபரவியல் கிளையின் செயற்பாடுகள் 20-21
7.1.8. மாவட்ட மோட்டார் வாகன அலுவலகம் 21
7.1.9. அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றம் சேவைகள் கிளை (MUSSD) 22
7.1.10. மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள் கிளை 23

7.2. சமூகசேவைகள் மற்றும் கலாச்சார நடவடிக்கைகளின் முன்னேற்றம்
7.2.1. கலாச்சார மற்றும் மத நடவடிக்கைகள் 23
7.2.2. சமூக சேவைகள் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் 24
7.2.3. நன்நடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகள் 24-25
7.2.4. மாவட்ட விளையாட்டு நடவடிக்கைகள் 26

**8.** அபிவிருத்தி வேலைகளின் முன்னேற்றம்
8.1. மாவட்ட திட்டமிடல் அலுவலக முன்னேற்ற அறிக்கை 27-37
8.2. மாவட்ட விவசாய அலுவலகம் 38
8.3. மாவட்ட சமுர்த்தி ஆணையாளர் அலுவலகம் திருகோணமலை 39
8.4. ஏனைய நேர்அமைச்சுக்கள் திணைக்களங்களினது மூலதன செலவு விபரம் 40

9. கொண்டாட்டங்களும் , முக்கிய நிகழ்வுகளும்
உற்பத்தித்திறன் போட்டிகள், புதுவருட கொண்டாட்டங்கள் ,ரணவிரு உபகார வைபவம் 41-42

10. வருடாந்த கணக்கு அறிக்கை 43-49

## 1. திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளரின் செய்தி



திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் அதன் கீழ் இயங்கும் பதினொரு பிரதேச செயலகங்களையும் ஒன்று சேர்த்து 2013 ம் ஆண்டுக்கான செயற்திறன் மற்றும் நிதி அறிக்கைக்கு முன்னுரை வழங்குவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

பொதுநிர்வாக சேவை மற்றும் ஏனைய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஏழாவது வருடமாகவும் நிறைவேற்றுவதற்கு முடிந்த ஒரு வருடமாக 2013 ம் ஆண்டு மிக முக்கியமானது. மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலாளர் காரியாலயங்களும் இணைந்து தமது கடமைகளைத் திட்டமிட்டபடி நிறைவேற்றியுள்ளனர். வினைத்திறமையும் தரமும் கொண்ட சேவை வழங்குதலானது தொடர்சியான வளர்ச்சியை வருடம் முழுவதிலும் கைப்பற்றிக்கொண்டுள்ளது.

மகிந்த சிந்தனையின் கீழ் திட்டமிட்ட "டயட்ட கிருள்ள - 2013" மற்றும் (கமநெகும, மகநெகும வீதி, மின்சாரம், நீர் முதலியவை), (மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (திவிநெகும) உள்நாட்டு வெளிநாட்டு முகவர் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்ட ஏனைய சமுதாய அபிவிருத்தித்திட்டங்களும் குறித்த காலவரையறைக்குள் செலவு மதிப்பீட்டிற்கு உட்பட்டதாக பூர்த்தி செய்ய முடிந்தமை எமது மாவட்டம் பெற்றுக் கொண்ட மிகப்பெரிய வெற்றியாகும்.

2013 ம் ஆண்டில் திருகோணமலை மாவட்ட அரச நிர்வாகம் மற்றும் ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சகல அமைச்சுக்களுக்குமுரிய அலுவலர்கள் வழங்கிய ஒத்துழைப்புத் தொடர்பாக நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். வினைத்திறனும் விளைதிறனும் கூடிய அரச சேவையை பெற்றுக் கொடுப்பதில் தமது பங்களிப்பை வழங்கிய அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவிப்பதற்கு இதனை சந்தர்ப்பமாக்கிக் கொள்கின்றேன்.



**மேஜர் ஜெனரல் ரி.ரி.ஆர். டி சில்வா**

**அரசாங்க அதிபர்/மாவட்ட செயலாளர்**

**திருகோணமலை**

## 2. திருகோணமலை மாவட்ட செயலகத்துக்கான ஓர் அறிமுகம்

### 2.1. எமது தூரநோக்கு, செயற்பாட்டு நோக்கு அறிக்கைகள்

**தூர நோக்கு அறிக்கை**

வினைத்திறனும் , விளைதிறனும் கூடிய பொதுச்சேவையினூடாக திருகோணமலை மாவட்ட மக்களது வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல்.

**செயற்பாட்டு நோக்கு அறிக்கை**

சரியான திட்டமிடல் மற்றும் வள ஈடுபடுத்தல் ஊடாக அரசின் கொள்கைகளுக்கு இணங்க , வினைத்திறனுடனும் நடுநிலைமையுடனும் , நியாயபூர்வமான சிநேக மனப்பாங்குடனும் திருகோணமலை மாவட்ட மக்களது தேவைகளை நிறைவேற்றுதல்.

### 2.2. நிறுவன குறிக்கோள்கள்

திருகோணமலை மாவட்ட செயலகம் அடிப்படையில் (1) பொதுநிர்வாகம் மற்றும் தாபன சேவைகளும் (2) பிரதேச செயலகங்கள் எனும் இரு கருத்திட்டங்களினூடாக மக்கள் சேவைகளை வழங்குகின்றது. இவ்விரு கருத்திட்டங்களினதும் பொதுவான குறிக்கோள்கள் வருமாறு :

- அரச அபிவிருத்தி முன்னெடுப்புக்களை அடைவதற்கான ஒரு மாவட்ட மட்ட நிறுவன ரீதியான வேலைத்திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் வினைத்திறனானதும் விளைதிறனானதுமான மக்கள் சேவையை பேணுதல்.
- திருகோணமலை மாவட்டத்தில் தமது நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துகின்ற நேர் அமைச்சுக்கள் , திணைக்களங்களுடன் கைகோர்த்து பணிபுரிதல்.
- உள்நாட்டு , வெளிநாட்டு முகவர் நிறுவனங்களால் முன்னெடுக்கப்படும் பொருளாதார , இடர் , நிவாரண, புனரமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்திக்கருத்திட்டங்களை நிர்வகித்தலும் ஒருங்கிணைத்தலும்
- மாவட்ட மட்ட நிதி வளங்களையும் பொதுச்சொத்துக்களையும் நிர்வகித்தல்
- தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- திருகோணமலை மாவட்டத்தின் தகுதியுள்ள மனித வளத்தை அபிவிருத்தி செய்து பேணுதல்.

## 2.3. முதன்மைச் செயற்பாடுகள்

**பொதுநிர்வாகம் மற்றும் தாபனச் சேவைகள்**

- அரசின் மாவட்ட பிரதிநிதியாக செயற்படுதல்
- மாவட்ட மற்றும் பிரதேச பொதுநிர்வாகத்துடன் தொடர்புடைய கொள்கைகள் , திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- நேர் அமைச்சுக்கள் / திணைக்களங்களினது நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்
- நேர் அமைச்சுக்கள் , திணைக்களங்களினால் வழங்கப்படும் நிதி மற்றும் ஏனைய வளங்களை முகாமை செய்தல்.
- இடர் , நிவாரண மற்றும் புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை நிர்வகித்தல்.
- திருகோணமலை மாவட்ட ஓய்வூதியக்கொடுப்பனவுகளை ஒருங்கிணைத்தல்.
- மாவட்டத்தில் பிரதேச மற்றும் மாவட்ட முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களையும் நிகழ்வுகளையும் நடாத்துதல்.
- வருமான சேகரிப்பு , அனுமதிப்பத்திரம் /உத்தரவுப்பத்திரங்களை வழங்குதல் / புதுப்பித்தல் ஆகியவற்றை ஒருங்கிணைத்தல்.
- மாவட்டத்தில் தேர்தல் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- மாவட்ட மட்ட உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள், தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்து நிறைவேற்றுதல்.

**பிரதேச செயலாளர் அலுவலகங்கள்**

- பிரதேச செயலாளர் பிரிவுக்குள் முக்கிய அரச பிரதிநிதியாக செயற்படல்
- சிவில் பதிவு நடவடிக்கைகளில் ஈடுபடல் ( தனியார், பிறப்பு, இறப்பு, திருமணம், ஏனைய செயற் பாடுகள் )
- சமுர்த்தி கொடுப்பனவு, ஓய்வூதியம் மற்றும் வேறு சமூக சேவை கொடுப்பனவுகள்
- வாகன வருமான அனுமதிப்பத்திரம், போக்குவரத்து அனுமதிப்பத்திரம், வருமானம்/பெறுமதி சான்றிதழ், ஏனையவை வழங்குதல்
- திவிநெகும, கமநெகும போன்ற தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை பிரதேச செயலாளர் மட்டங்களில் செயற்படுத்தல்.
- மாகாண அமைச்சு மற்றும் திணைக்களங்களின் நிகழ்ச்சித்திட்டங்களை ஒருங்கிணைத்தல்
- நேரடியான அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் நிகழ்ச்சித்திட்டங்களைபிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.
- தேர்தல் நடவடிக்கைகள் மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதல்
- அரச சேவையின் பொருட்டு பிரதேச மட்டத்தில் தேவைப்படும் எல்லா சந்தர்ப்பங்களிலும் செயற்படல்

## 3. திருகோணமலை மாவட்டம் - ஒரு கண்ணோட்டம்

திருகோணமலைப் பிரதேசமானது இலங்கைத்துறைமுகத்துடன் இராணுவ , வர்த்தக மற்றும் புராண வரலாற்றுப் பின்புலமாகக்கொண்ட இயற்கையான அழகுக்காட்சிகளுடன் , இலங்கையின் கிழக்குக்கரையில் அமைந்த நகரமாகும். திருகோணமலை மாவட்டம் வடக்கில் முல்லைத்தீவு மாவட்டத்தினாலும் , மேற்கில் அனுராதபுரம் , பொலனறுவை மாவட்டங்களினாலும் , தெற்கில் மட்டக்களப்பு மாவட்டத்தினாலும் , கிழக்கு கடற்கரைப்பிரதேசத்தாலும் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. திருகோணமலை வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும்போது , மகாவம்சம் , சூள வம்சம் போன்ற முக்கிய இரு பௌத்த வரலாற்று நூல்களில் தற்போதைய திருகோணமலை கோகண்ண , கோகர்ண மற்றும் கோணகமக எனும் பெயர்களால் ( இலங்கை வரலாற்றின் , அனுராதபுர பொலநறுவை காலப்பகுதியில் ) அழைக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலை மாவட்டம் 2728 சதுர கிலோமீற்றர் பரப்பளவை உள்ளடக்கி கிழக்கு மாகாணத்தில் அமையப்பெற்றுள்ளது. இம்மாவட்டம் பதினொரு பிரதேச செயலகப்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலகப்பிரிவுகள் 230 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளாக மேலும் உப பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு தொகைமதிப்பு புள்ளி விபரத்தின் படி மொத்த சனத்தொகை 278,182 ஆகும். இச்சனத்தொகையில் 42 % முஸ்லிம்கள் ஆவதுடன் சிங்களவர்கள் மற்றும் தமிழர்கள் முறையே 26 % , 31 % ஆக காணப்படுகின்றனர்.

மக்களின் பிரதான வாழ்வாதாரத் தொழில்களாக விவசாயமும் மீன்பிடித்தொழிலும் விளங்குகின்றன. மாவட்டத்தின் பிரதான விவசாய பயிர்ச்செய்கையாக நெல் உற்பத்தி காணப்படுகின்றது. கந்தளாய் குளம் , வென்ராசவெவ , மொறவெவ , மகதிவுல்வெவ , மற்றும் பரவிபன்குளம் ஆகியவை சில பிரதான குளங்களாகும். கந்தளாய் , அல்லைக்கந்தளாய் மற்றும் மொறவெவ போன்ற மூன்று பிரதான நீர்ப்பாசன கருத்திட்டங்களும் காணப்படுகின்றன. கால்நடை வளர்ப்பும் மற்றொரு வாழ்வாதாரமாகும். திருகோணமலை உலகப்புகழ்பெற்ற கடற்கரைகளையும் சுற்றுலாத்தலங்களையும் கொண்டிருப்பதனால் சுற்றுலாத்துறையும் மற்றொரு பிரதான பொருளாதார நடவடிக்கையாகவும் விளங்குகின்றது. மிகச் சிறந்த இயற்கைத்துறைமுகத்தைக் கொண்டிருப்பதனால் பிறிமாசிலோன் , டோக்கியோ சீமெந்து போன்ற சர்வதேச கம்பனிகள் திருகோணமலையில் தமது உற்பத்திப்பொறித்தொகுதிகளையும் விநியோக நிலையங்களையும் அமைத்துள்ளன.

ஐம்பது கிலோமீற்றர் தூரத்திற்குப்பரந்துள்ள திருகோணமலை துறைமுகம் உலகின் சிறந்த துறைமுகங்களில் ஒன்றாகும். மூன்று பக்கங்களில் மலைகளையும் மறுபக்கத்தில் சிறு தீவுகள் சிலவற்றையும் கொண்டுள்ளது. உலகின் ஐந்தாவது பெரிய துறைமுகமான இது உலகின் சிறந்த துறைமுகம் என “ வாட் நெல்சன் ” அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.நீண்ட நிலாவெளி கடற்கரையில் அமைந்துள்ள “ புறாமலை ” தீவு மனதைக்கொள்ளை கொள்ளும் இயற்கைக்காட்சியாகும். நிலாவெளி கடற்கரையிலிருந்து 15 நிமிட படகுச்சவாரி மூலம் இதனைச்சென்றடையலாம். கடலினுள் அமைந்துள்ள கடல்படுதிரவியங்கள் , பல்வகை நிறமீன்கள் மற்றும் கடல்வாழ் உயிரினங்களை காண்பதற்காக உல்லாசப்பயணிகள் எப்போதும் இவ்விடத்தில் கூடுகின்றனர்.
கடற்கரை ஓரத்தில் காணப்படுகின்ற பிரதான புவியியல் அம்சங்களில் ஒன்றாக நிலாவெளி புறாத்தீவு காணப்படுகின்றது. சாதாரணமாக நிலாவெளி கடற்கரையிலிருந்து 15 நிமிடத்தில் வெளியக இயந்திர படகுகளில் இத்தீவிற்கு பயணிக்க முடியும். சுற்றுலாப்பயணிகள் அடிக்கடி நீரடி நீச்சலுக்காகவும் நீர் வாழ் உயிரினங்களை பார்ப்பதற்கும் இங்கு வருகை தருகின்றனர்.
பிரட்ரிக் கோட்டையில் வடக்கு மூலையில் 360 அடி ( 110 மீற்றர் ) உயரத்தில் அமைந்துள்ள மலையானது சுவாமி மலையெனப் பிரசித்தி பெற்றுள்ளது. அதன் முற்றத்தில் திருக்கோணேஸ்வரர் கோயில் அமைந்துள்ளது. சிவபக்தனான இராவணன் என்னும் அரசனால் இக்கோவில் கட்டப்பட்டதாகும். மிகப்பிரசித்தி பெற்ற திருக்கோணேஸ்வரமும் மேலும் பல இந்துத்திருத்தலங்களும் இம்மாவட்டத்தில் அமைந்துள்ளன. வரலாற்றுப்பிரசித்திப்பெற்ற பௌத்த தலங்களான திரியாய் விகாரை , சேருவில விகாரை , வெல்கம் விகாரை என்பனவும் அமைந்துள்ளன. இதே போன்று கிண்ணியா முஸ்லீம் பள்ளிவாசல் மற்றும் கத்தோலிக்க கிறிஸ்தவ புனிதத்தலங்கள் பலவும் இங்கு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.
பலதட்பவெப்ப நிலைகளைக்கொண்ட ஏழு வெந்நீர் ஊற்றுக்கிணறுகள் கன்னியாப்பிரதேசத்தில் ஒருங்கே அமைந்துள்ளன. இக்கிணற்று நீர் நோய் தீர்க்கும் மருந்தாக இங்கு வாழும் மக்களினால் நம்பப்படுகின்றது.திருகோணமலை மாவட்டம் தமிழ் , சிங்கள , முஸ்லீம் , பறங்கியர் ஆகிய நான்கு இன மக்களும் சமாதானமாக வாழும் அமைதிப்பிரதேசமென்பதற்கு வரலாறு உள்ளது. இந்நகரம் விடுமுறையைக் கழிப்பதற்கான இடமாக மட்டுமல்லாது பல்வேறு துறைகளையும் கொண்ட நகரமாகவும் உள்ளது. இயற்கையாக இங்கு அமைந்துள்ள இயற்கைத்துறைமுகத்தின் முக்கியத்துவத்தை இங்கு உள்ள பொருளாதார மற்றும் இராணுவ செயற்பாடுகள் அதிகரிக்கின்றன. இற்றைவரை உள்ளதைப்போல் எதிர்காலத்திலும் இம்மாவட்டம் இலங்கையில் கவர்ச்சிகரமான பிரதேசமாக அமைந்திருக்கும்.

## 4. திருகோணமலை மாவட்டத்தின் வரைபடம்



## 5. திருகோணமலை மாவட்டத்தின் புள்ளிவிபர தரவுகள்

### 5.1. அடிப்படை தகவல்கள்

| | வகை | விபரம் |
|---|---|---|
| 1 | மாவட்டத்தின் பெயர் | திருகோணமலை |
| 2 | மாகாண அமைவிடம் | கிழக்கு மாகாணம் |
| 3 | மாவட்டத்தின் இட பரப்பளவு | 2728.8 சதுர.கிமீ(காணி-2,630.8 சதுர.கிமீ வாவி-98 சதுர.கிமீ) |
| 4 | பிரதேச செயலகங்கள் | 1. பட்டினமும் சூழலும் 2. பதவிஸ்ரீபுர 3.கோமரன்கடவெல<br>4. கிண்ணியா 5. சேருவில 6. மூதூர் 7. கந்தளாய்<br>8. குச்சவெளி 9. மொறவெவ 10. தம்பலகாமம்<br>11. வெருகல் |
| 5 | கிராம அலுவலர் பிரிவுகளும் கிராமங்களும் | கிராம அலுவலர் பிரிவு–230கிராமம்-766 |
| 6 | சனத்தொகை | 378,182 (2012 புள்ளி விபரவியல் அறிக்கையின் படி) |
| 7 | உள்ளூராட்சி சபைகள் | <u>**நகர சபைகள்**</u><br>1.திருகோணமலை நகர சபை 2. கிண்ணியா நகர சபை<br><br><u>***பிரதேச சபைகள்***</u><br>1. .பட்டினமும் சூழலும் 2. பதவிஸ்ரீபுர 3.கோமரன்கடவெல<br>4. கிண்ணியா 5. சேருவில 6. மூதூர் 7. கந்தளாய்<br>8. குச்சவெளி 9. மொறவெவ 10. தம்பலகாமம்<br>11. வெருகல் |
| 8 | தேர்தல் பிரிவுகள் | அ- சேருவில ஆ-திருகோணமலை இ- மூதூர் |
| 9 | பாராளுமன்ற உறுப்பினர்கள் | கௌரவ சுசந்த புஞ்சிநிலமே, கௌரவ M.K.D.S.குணவர்த்தன, கௌரவ R.சம்பந்தன், கௌரவ.M.S.தௌபீக் |
| 10 | மாகாண சபை உறுப்பினர்கள் | கிழக்கு மாகாண சபை தேர்தலில் திருகோணமலை மாவட்டத்திற்கு 10 ஆசனங்கள் ஒதுக்கப்பட்டன. (ITAK -3, UPFA-3, SLMC-2, UNP-1, NIF-1) |
| 11 | உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் | 118 |
| 12 | சுற்றுலா விடுதி (பொது நிர்வாக அமைச்சின் கீழ்) | சுற்றுலா விடுதி,109, அரசாங்க அதிபரின் வாசல் தல வீதி,திருகோணமலை |

### 5.2 <u>திருகோணமலை மாவட்டத்தின் இடப்பகிர்வு, கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் சனத்தொகை</u>

| தொ. இல | பிரதேச செயலக பிரிவு | பரப்பளவு (சதுர கிமீ) | கிராமஅலுவலக பிரிவு எண்ணிக்கை | கிராமங்களின் எண்ணிக்கை | சனத்தொகை |
|---|---|---|---|---|---|
| 01 | திருகோணமலை பட்டினமும் சூழலும் | 148.0 | 42 | 112 | **97,234** |
| 02 | பதவிஸ்ரீபுர | 217.1 | 10 | 26 | 11,858 |
| 03 | கோமரன்கடவெல | 285.0 | 10 | 41 | 7,339 |
| 04 | கிண்ணியா | 146.9 | 31 | 107 | 64,451 |
| 05 | சேருவில | 279.0 | 17 | 28 | 13,546 |
| 06 | மூதூர் | 179.4 | 42 | 96 | 56,379 |
| 07 | கந்தளாய் | 397.3 | 23 | 62 | 46,641 |
| 08 | குச்சவெளி | 313.3 | 24 | 86 | 33,100 |
| 09 | மொறவெவ | 322.4 | 10 | 41 | 7,946 |
| 10 | தம்பலகாமம் | 244.4 | 12 | 48 | 28,356 |
| 11 | வெருகல் | 98.0 | 09 | 20 | 11,332 |
| | மொத்தம் | **2,630.8** | **230** | **687** | **378,182** |

*- மூலம்:- புள்ளிவிபரவியல் திணைக்களம் 2012

## குடிசன பரம்பல் இன ரீதியாக

| தொ. இல | பிரதேச செயலக பிரிவு | சிங்களவர் | இலங்கை கத் தமிழர் | இந்திய த் தமிழர் | இஸ்லாம ியர் | பறங்கிய ர் | மலாயர் | இலங்கை ச் செட்டியார் | ஏனை யவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | திருகோணமலை பட்டினமும் சூழலும் | 21,179 | 61,287 | 546 | 13,113 | 750 | 333 | 4 | 27 |
| 02 | பதவிஸ்ரீபுர | 11,846 | 10 | | 1 | | 1 | | |
| 03 | கோமரன்கடவெல | 7,313 | 25 | | 1 | | | | |
| 04 | கிண்ணியா | 19 | 2,522 | 3,445 | 58,447 | 1 | 2 | 2 | 13 |
| 05 | சேருவில | 9,293 | 1,816 | 3 | 2,426 | 7 | | | 1 |
| 06 | மூதூர் | 444 | 20,935 | 4 | 34,984 | | 2 | | 10 |
| 07 | கந்தளாய் | 37,448 | 1,534 | 2 | 5,108 | 47 | 14 | 8 | 4 |
| 08 | குச்சவெளி | 1,193 | 10,553 | 40 | 21,307 | 3 | | | 4 |
| 09 | மொறவெவ | 5,750 | 888 | 3 | 1,300 | 2 | 2 | | 1 |
| 10 | தம்பலகாமம் | 7,476 | 4,701 | | 16,164 | 1 | 10 | | 4 |
| 11 | வெருகல் | 30 | 11,283 | 12 | 3 | 4 | | | |
| | மொத்தம் | **101,991** | **115,549** | **6,531** | **152,854** | **815** | **364** | **14** | **64** |

*- மூலம்:- புள்ளிவிபரவியல் திணைக்களம் 2012




## குடிசன பரம்பல் இன ரீதியாக

| மாவட்டம் | மதம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | பௌத்தம் | இந்து | இஸ்லாம் | ரோமன் கத்தோலிக்கம் | ஏனைய கத்தோலிக்கர் | ஏனையவர் |
| திருகோணமலை மாவட்டம் | 98,772 | 98,133 | 159,251 | 14,795 | 7,097 | 134 |
| சதவீதம் % | 26.1 | 25.9 | 42.1 | 3.9 | 1.9 | 0.0 |



# 6. நிறுவன அமைப்பும் வளங்களும்

## 6.1. பதவி நிலை உத்தியோகத்தர்களின் விபரம் - மாவட்ட செயலகமும், பிரதேச செயலகங்களும்

**மாவட்ட செயலகம், திருகோணமலை**

| தொ.இல | பெயர் | பதவி | தொலைபேசி இல |
|---|---|---|---|
| 01 | மேஜர் ஜெனரல் ரி.ரி.ரஞ்சித் டி. சில்வா ஆர்.டபிள்யு.பி, ஆர்.எஸ்பி.ஈ யு.எஸ்.பி, பி.எஸ்.சி | அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர் | 026-2222235 |
| 02 | திரு.எஸ்.அருள்ராசா | மேலதிக அரசாங்க அதிபர்/ மேலதிக மாவட்டச் செயலாளர் | 026-2222236 |
| 03 | திரு.ஏ.எம். ஜேசுராசா | பிரதான கணக்காளர் | 026-2223555 |
| 04 | திருமதி.கே.பரமேஸ்வரன் | திட்டமிடல் பணிப்பாளர் | 026-2221028 |
| 05 | திரு.கே.மயில்வாகனம் | பொறியியலாளர் | 026-2224809 |
| 06 | திரு.எஸ். திரிமான்ன | சமுர்த்தி உதவி ஆணையாளர் | 026-2222311 |
| 07 | திரு.ஏ.மனம்பேரி | உதவி காணி ஆணையாளர் | 026-2222234 |
| 08 | திரு.ஆர்.பி.உபாலி | விவசாய உதவிப் பணிப்பாளர் | 026-2050816 |
| 09 | திரு.எஜ்.ஜீ.எஸ்.பிரேமரத்ன | உரமானிய உதவிப் பணிப்பாளர் | 026-2050816 |
| 10 | திரு.எம்.எஸ்.எம்.இக்ரிமா | வெடிபொருள் கட்டுப்பாட்டு உதவிப் பணிப்பாளர் | 071-8614970 |
| 11 | திரு.எஸ்.குருகுலசூரிய | நிர்வாக உத்தியோகத்தர் | 026-2220034 |

**திருகோணமலை மாவட்ட பிரதேச செயலாளர்கள்**

| தொ.இல | பெயர் | பதவி | தொலைபேசி இல |
|---|---|---|---|
| 01 | திருமதி.எஸ்.ஜலதீபன் | பி.செ. பட்டினமும் சூழலும் | 026-2225941 |
| 02 | திரு.வி.பி.எஸ்.ஜினேந்திரசேன | பி.செ. பதவிஸ்ரீபுர | 025-2255234 |
| 03 | திரு.ஆர். ஜயசுந்தர | பி.செ. கோமறன்கடவல | 026-2255033 |
| 04 | திரு.சி.கிருஸ்ணேந்திரன் | பி.செ. கிண்ணியா | 026-2236235 |
| 05 | திரு.அநுருத்த பியதாச | பி.செ. சேருவில | 026-2251435 |
| 06 | திரு.என்.பிரதீபன் | பி.செ. மூதூர் | 026-2238235 |
| 07 | திரு.யு.ஜே.எம்.எஸ்.எஸ்.பி.ஜயசிங்க | பி.செ. கந்தளாய் | 026-2234234 |
| 08 | திரு ஏ.உமாமகேஸ்வரன் | பி.செ. குச்சவெளி | 026-2252635 |
| 09 | திரு.கே.டி.பிரேமதாச | பி.செ. மொறவெவ | 026-2225835 |
| 10 | திரு.டி.எம்.ஆர்.பி.தசநாயக்க | பி.செ. தம்பலகாமம் | 026-2248033 |
| 11 | திருபி.தனேஸ்வரன் | பி.செ. வெருகல் | 060-2264681 |

## 6.2. ஒழுங்கு அமைப்பு வரைபடம் – மாவட்ட செயலகம், திருகோணமலை



## 6.3.மனித வள தரவுகள்

**மாவட்டசெயலகம் , திருகோணமலை**

திருகோணமலை மாவட்டசெயலகத்தின் மொத்த அனுமதிக்கப்பட்ட ஆளணி 31.12.2013 இல் 71 உத்தியோகத்தர்களாக இருந்தது. இது ஏழு சிரேஸ்ட நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களையும் மூன்று சிரேஸ்ட மட்ட உத்தியோகத்தர்களையும் நாற்பத்து நான்கு இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்களையும் உள்ளடக்குகின்றது. 2013 ஆம் ஆண்டின் இறுதித் தினத்தில் மூன்று அமைய உத்தியோகத்தர்கள் உட்பட ஐம்பது உத்தியோகத்தர்கள் சேவையாற்றியிருந்தனர். கீழே தரப்பட்டுள்ள அட்டவணை இதனை விபரிக்கிறது.

### ஆளணி விபரம் 31-12-2013

| தொ .இல | பதவி | சேவை | வகுப்பு /தரம் | சம்பள தொகுதி | அனுமதிக்-கப்பட்ட ஆளணி | தற்போதைய ஆளணி |
|---|---|---|---|---|---|---|
| | **சிரேஷ்ட தரம் (A)** | | | | | |
| 1 | மாவட்டச் செயலாளர் | இ.நி.சே. | I (Special) | SL - 3-2006 | 1 | 1 |
| 2 | மேலதிக மாவட்டச் செயலாளர் | இ.நி.சே. | I | SL - 1-2006 | 1 | 1 |
| 3 | பிரதம கணக்காளர் | இ.க.சே | I | SL - 1-2006 | 1 | 1 |
| 4 | பிரதம உள்ளக கணக்காய்வாளர் | இ.க.சே | I | SL - 1-2006 | 1 | 1 |
| 5 | உதவி மாவட்டச் செயலாளர் | இ.நி.சே. | III | SL - 1-2006 | 1 | 0 |
| 6 | கணக்காளர் | இ.க.சே | III | SL - 1-2006 | 1 | 0 |
| 7 | பொறியியலாளர் | இ.பொ.சே | III | SL - 1-2006 | 1 | 1 |
| | | | | | **7** | **6** |
| | **மூன்றாம் மட்டம்(B)** | | | | | |
| 8 | நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.உ.(விசேடம்) | (Supra) | MN - 7-2006 | 1 | 1 |
| 9 | மொழி பெயர்ப்பாளர் | மொ.பெ.சேவை. | I | MN - 6- 2006 | 1 | 0 |
| 10 | தரவுப் பதிவு உத்தியோகத்தர் | த.ப.சேவை | | MN - 6- 2006 | 1 | 1 |
| | | | | | **3** | **2** |
| | **இரண்டாம் மட்டம் (C)** | | | | | |
| 11 | அபிவிருத்தி இணைப்பாளர் | .அ. இ. சேவை | | MN - 4 -2006 | 2 | 0 |
| 12 | வரவு செலவு திட்ட உதவியாளர் | வ.செ.சேவை | | MN - 4 -2006 | 2 | 1 |
| 13 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | அ.உ.சேவை | I,II,III | MN - 4 -2006 | 12 | 2 |
| 14 | அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சேவை | I,II,III | MN – 2-2006 | 25 | 25 |
| 15 | வரைஞர் | வரைஞர் சேவை | III | MN -1- 2006 | 1 | 0 |
| 16 | தரவுப் பதியுனர் | த.ப.சேவை | III | MN - 1 - 2006 | 1 | 0 |
| 17 | தொழில்நுட்ப உதவியாளர் | தொ.நு.சேவை | III | MT -2 - 2006 | 1 | 0 |
| | | | | | **44** | **28** |
| | **ஆரம்ப மட்டம்(D)** | | | | | |
| 18 | சாரதி | சாரதி சேவை | II A, II B | PL -3- 2006 | 5 | 4 |
| 19 | அலுவலக பணியாளர் | அ.ப.சேவை | I,II,III | PL -1- 2006 | 8 | 7 |
| 20 | காவலாளி | காவலாளி சேவை | II | PL -1- 2006 | 2 | 0 |
| 21 | தோட்டத் தொழிலாளி | தொழிலாளிசேவை | II | PL -1- 2006 | 1 | 0 |
| 22 | சுகாதாரத் தொழிலாளி | தொழிலாளிசேவை | II | PL -1- 2006 | 1 | 0 |
| | | | | | **17** | **11** |
| | **அமையம்,ஒப்பந்தம்,சமயாசமயம்** | | | | | |
| | ஆரம்பம் | | | | | |
| | அ.ப. (அமையம்) | | | | | 3 |
| | **உப தொகை** | | | | | **3** |
| | **மொத்த தொகை** | | | | 71 | **50** |

**பிரதேச செயலகங்கள்**

திருகோணமலை மாவட்டம் பதினொரு பிரதேசசெயலகங்களையும் 31.12.2013 இல் தொளாயிரத்து நாற்பத்திரண்டு ( 942 ) மொத்த அனுமதிக்கப்பட்ட ஆளணியையும் கொண்டிருந்தது. இது முப்பத்திமூன்று சிரேஸ்ட நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்களையும் முப்பத்திமூன்று சிரேஸ்ட உத்தியோகத்தர்களையும் எழுநூற்று நாற்பத்திரண்டு இரண்டாம் மட்ட உத்தியோகத்தர்களையும் நூற்று இருபத்தியெட்டு ஆரம்ப மட்ட உத்தியோகத்தர்களையும் உள்ளடக்குகின்றது. 31.12.2013 இல் நானூற்று எழுபத்து இரண்டு ( 472 ) உத்தியோகத்தர்கள் சேவையாற்றியிருந்ததுடன் நானூற்று எழுபது உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக இருந்தது.

## ஆளணி விபரம் 31-12-2013

| தொ .இல | பதவி | சேவை | வகுப்பு /தரம் | சம்பள தொகுதி | அனுமதிக்கப்பட்ட ஆளணி | தற்போதைய ஆளணி |
|---|---|---|---|---|---|---|
| | **சிரேஷ்ட தரம் (A)** | | | | | |
| 1 | பிரதேச செயலாளர் | இ.நி.சே. | I | SL - 1-2006 | 11 | 11 |
| 2 | உதவி பிரதேச செயலாளர் | இ.நி.சே. | III | SL - 1-2006 | 11 | 8 |
| 3 | கணக்காளர் | இ.க.சே | III | SL - 1-2006 | 11 | 7 |
| | **உப மொத்தம்** | | | | **33** | **26** |
| | **மூன்றாம் மட்டம் (B)** | | | | | |
| 4 | நிர்வாக உத்தியோகத்தர் | அ.மு.உ.(விசேடம்) | (Supra) | MN - 7-2006 | 11 | 5 |
| 5 | கிராம உத்தியோகத்தர் | கி.உ.சே.(விசேடம்) | (Supra) | MN - 7-2006 | 11 | 6 |
| 6 | மொழி பெயர்ப்பாளர் | மொ.பெ.சேவை. | I | MN-6-2006 | 11 | 0 |
| | **உப மொத்தம்** | | | | **33** | **11** |
| | **இரண்டாம் மட்டம்(C )** | | | | | |
| 7 | அபிவிருத்தி இணைப்பாளர் | அ. இ. சேவை. | | MN -4 -2006 | 11 | 2 |
| 8 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | அ.உ.சேவை | | MN - 4 -2006 | 55 | 10 |
| 9 | அரச முகாமைத்துவ உதவியாளர் | அ.மு.உ.சேவை | I,II,III | MN –2-2006 | 419 | 167 |
| 10 | தரவுப் பதியுனர் | த.ப.சேவை | III | MN-1-2006 | 22 | 1 |
| 11 | கிராம உத்தியோகத்தர் | கி.உ..சேவை | I,II,III | MN -1- 2006 | 230 | 164 |
| 13 | தொழில்நுட்ப உதவியாளர் | தொ.நு.சேவை | III | MT -2- 2006 | 11 | 6 |
| | **உப மொத்தம்** | | | | **748** | **336** |
| | **ஆரம்ப மட்டம்(D)** | | | | | |
| 14 | சாரதி | சாரதி சேவை | II A, II B | PL -3- 2006 | 32 | 21 |
| 15 | அலுவலக பணியாளர் | அ.ப.சேவை | I,II,III | PL -1- 2006 | 42 | 62 |
| 16 | காவலாளி | காவலாளி சேவை | | PL -1- 2006 | 32 | 7 |
| 17 | அலுவலக தொழிலாளி | தொழிலாளி சேவை | III | PL -1- 2006 | 11 | 2 |
| 18 | சுகாதாரத் தொழிலாளி | தொழிலாளி சேவை | III | PL -1- 2006 | 11 | 3 |
| | **உப மொத்தம்** | | | | **128** | **95** |
| | அமையம்,ஒப்பந்தம்,சமயாசமயம் | | | | | |
| | ஆரம்பம் | | | | | 4 |
| | **உப மொத்தம்** | | | | | 4 |
| | **மொத்த தொகை** | | | | **942** | **472** |

**பட்டதாரி பயிலுநர் -** பட்டதாரிகள் அரசசேவையில் இணைத்துக் கொள்ளப்படுதலின் கீழ் 758 பட்டதாரிகள் திருகோணமலை மாவட்டத்திலே இணைத்துக் கொள்ளப்பட்டு அவர்கள் தற்சமயம் மாவட்டத்தின் அரச நிறுவனங்களில் பயிற்சிக்காக நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பாரிய ஆட்சேர்ப்பானது பிரதேசத்தின் அரச நிறுவனங்களில் மனித வளத்தின் தேவையை பூர்த்தி செய்வதற்கும், இளைஞர்களுக்கு தொழில் வாய்பினைப் பெற்றுக் கொடுப்பதன் ஊடாக அரசசேவையில் இணைத்துக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் அளித்துள்ளது.

## 7. செயற்பாடுகள்– 2013

திருகோணமலை மாவட்ட செயலகம் ,மாவட்ட நிர்வாகம் மற்றும் பிரதேசநிர்வாகம் எனும் இரு பிரதான சேவைக்கருத்திட்டங்களின் கீழ் சேவையாற்றி வருகின்றது. மாவட்ட நிர்வாகத்தின் கீழ் பதினைந்திற்கும் அதிகமான மாவட்ட சேவைப்பிரிவு / அலகு கச்சேரி ஆதனத்தில் அமையப்பெற்றுள்ளது. பிரதேச நிர்வாகம் பதினொரு பிரதேச செயலகங்களில் மேற்கொள்ளப்படுகின்றது. ஆகவே இவ்விரண்டினதும் செயற்பாடுகள் ஒன்று சேர்க்கப்பட்டு வழங்கப்படுகின்றது.

### 7.1. பொது நிர்வாகம் மற்றும் தாபன சேவைகளினது முன் செயற்பாடுகள்

பொது நிர்வாகம் மற்றும் தாபனசேவைகள் பிரதானமாக மாவட்டத்தின் பொதுமக்கள் சேவையாக இருக்கின்றது. மாவட்ட செயலகத்தில் பிரஜைகள் பட்டயம் தீர்மானிக்கப்பட்ட பொதுமக்கள் சேவையை வழங்குவதினை அறிந்து கொள்ளும் ஒர் கருவியாக காணப்படுகின்றது. பொதுமக்கள் தாமாகவே சேவைதொடர்பாக அறிந்து கொள்ள வசதியாக மாவட்ட செயலக நுழைவாயிலில் பிரஜைகள் பட்டயம் விபரிக்கப்பட்டுள்ளது. எல்லா உத்தியோகத்தர்களும் தீர்மானிக்கப்பட்டதன் படி சேவைகளை வழங்குமாறு அறிவுரை தரப்பட்டுள்ளன.

#### 7.1.1. அனுமதிப்பத்திரத்தினையும் உத்தரவுப்பத்திரத்தினையும் வழங்குதல் / புதுப்பித்தல்

**நிறுவன ரீதியான பாதுகாப்பு மற்றும் பண்ணைப் பயிர்களுக்கான பாதுகாப்பிற்கான அனுமதிப் பத்திரம்**

துப்பாக்கி மற்றும் வெடிமருந்துகளுக்கான அனுமதி பத்திரம் வழங்குதல் தாபனக் கிளையால் வழங்கப்படும் பிரதான சேவைகளில் ஒன்றாகும். 2013 ம் ஆண்டுக்கு பண்ணைப்பயிர்களைப் பாதுகாக்க 13 துப்பாக்கி அனுமதிப் பத்திரங்களும் நிறுவனங்களின் பாதுகாப்பிற்காக 63 துப்பாக்கி அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டுள்ளது. கீழே அட்டவணையில் இந்த விபரங்கள் விபரிக்கப்பட்டுள்ளது. அதே போல் 5 தனியார் பாதுகாப்பு முகவர்களுக்கும் இவ் அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| | அனுமதிப்பத்திரம் வழங்குவதன் நோக்கம் | வழங்கப்பட்ட எண்ணிக்கை | நபர் / நிறுவனம் | வருமானம் |
|---|---|---|---|---|
| 1 | விவசாய பயிர்களுக்கான பாதுகாப்பு | 13 | விவசாயிகள் | 1,300.00 |
| 2 | நிறுவன ரீதியான பாதுகாப்பு | 16 | இலங்கை வங்கி | 3,200.00 |
| 3 | நிறுவன ரீதியான பாதுகாப்பு | 05 | இந்திய எண்ணெய் கம்பனி | 1,000.00 |
| 4 | நிறுவன ரீதியான பாதுகாப்பு | 27 | மக்கள் வங்கி | 7,200.00 |
| 5 | நிறுவன ரீதியான பாதுகாப்பு | 12 | துறைமுக அதிகாரசபை | 2,400.00 |
| 6 | பாதுகாப்பு முகவர்களுக்கான பதிவுகள் | 03 | | 3,000.00 |
| | **மொத்தம்** | **76** | | **18,100.00** |

## ஓபியம் உரிமம்

2013 ம் ஆண்டிற்கான, மாவட்டத்தின் சுதேச மருத்துவத்தை முன்னேற்ற உதவும் நோக்குடன் பாரம்பரியம் மற்றும் ஆயுள்வேத வைத்தியர்களுக்கு 11 அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. இதில் அதிகமான விண்ணப்பதாரிகள் (11) திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்திலிருந்தும் ஏனையவை மொறவெவ பிரதேச செயலகத்தில் ஒன்றும் மூதூர் (1), கிண்ணியா (1), தம்பலகாமம் (1), கோமறங்கடவெல(1) மற்றும் கந்தளாய் (1) பிரதேசத்தில் தலா ஒவ்வொரு அனுமதிப்பத்திரமுமாக இருந்தன. திருகோணமலை மாவட்டத்தில் பாரம்பரிய மற்றும் ஆயுள்வேத வைத்தியர்களின் வேண்டுகோளின் அடிப்படையில் ஓபியம்அனுமதிப்பத்திரம் வழங்கலும் புதுப்பித்தலும் ஆண்டுதோறும் இடம்பெறுகின்றது. இதற்கு ஆயுள்வேத மருத்துவ மாகாண ஆணையாளரது சிபார்சு விண்ணப்பதாரிகளால் பெறப்பட்டிருக்க வேண்டும்.

## கள்ளு அனுமதிப்பத்திரம் 2012 - 2013

திருகோணமலை மாவட்ட செயலகத்தின் மேற்பார்வையின் கீழ் 3 கள்ளு தவறணைக்கான அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளது. பயங்கரவாத நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்ட பின் கள்ளு உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் கள்ளு தவறணைகளின் கேள்வி மாவட்டத்திற்கு வெளியிலிருந்து வாங்குவோர் வருவதால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

| | கள்ளுத் தவறணையின் பெயரும் அமைவிடமும் | அனுமதிப் பத்திர உரிமையாளர் பெயர் | மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| 1 | வில்லூன்றி கள்ளுத் தவறணை, வில்லூன்றி | I.G.G.N.ஹப்புஹஸ்குபுர | 6,290,480.30 |
| 2 | தெக்கலூத்து கள்ளுத் தவறணை, தெக்கலூத்து | W.சுஜானி சில்வா | 4,412,331.00 |
| 3 | நிலாவெளி கள்ளுத் தவறணை, நிலாவெளி | W.சுஜானி சில்வா | 8,103,899.32 |
| | **2013 இற்கான மொத்தப் பெறுமதி** | | **18,806,710.62** |

## வெடிபொருள் அனுமதிப்பத்திரம்

வெடிபொருள் அனுமதிப்பத்திரம் ஒவ்வொரு வருடமும் பட்டாவு வழங்குனர்களுக்கும் கடை உரிமையாளர்களுக்கும் வழங்கப்படுகின்றது. 16 விண்ணப்பங்கள் வழங்குனர்களாலும் கடை உரிமையாளர்களாலும் 2013 இல் முன்வைக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.

| பிரதேச செயலகங்கள் | அனுமதிப் பத்திர உரிமையாளர் எண்ணிக்கை | 2013 இற்கான அறவீடு |
|---|---|---|
| மாவட்ட வழங்குனர் | 02 | 4,000.00 |
| திருகோணமலை பட்டணமும் சூழலும் | 13 | 3,250.00 |
| கந்தளாய் | 01 | 250.00 |
| சேருவில | - | - |
| **மொத்தம்** | **16** | **7.500.00** |

## புதிய வெடிபொருட்கள் அனுமதிபத்திரம்

3 புதிய வெடிபொருட்கள் அனுமதிப்பத்திரம் 2013 இல் கடை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

| பிரதேச செயலகங்கள் | அனுமதிப் பத்திர உரிமையாளர் எண்ணிக்கை | 2013 இற்கான அறவீடு |
|---|---|---|
| திருகோணமலை பட்டணமும் சூழலும் | 03 | 750.00 |
| கந்தளாய் | - | - |
| சேருவில | - | - |
| **மொத்தம்** | **03** | **750.00** |

## புதிய வெடிபொருட்கள் உத்தரவுப் பத்திரம்

போர் முடிவிற்கு வந்த பின்னர் மாவட்டத்தில் கட்டுமான நடவடிக்கைகள் விரைவாக வளர்ச்சியடைந்துள்ளன. இதனால் கட்டிடப் பொருட்களின் கேள்வி மேலும் தோன்றியுள்ளது. ஆகவே புதிய கட்டிட கற்கள் எடுப்போர், கட்டிடதாரர் ஆகியோரால் புதிய விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுபவை அதிகரித்துள்ளது. 2013 ஆம் ஆண்டில் பாதுகாப்பு அமைச்சினால் 07 விண்ணப்பங்கள் அனுமதிக்கப்பட்டிருந்தது. 46 புதுப்பிக்கப்பட்டிருந்தது.

| பிரதேச செயலகங்களின் பெயர் | புதிய விண்ணப்பதாரிகள் எண்ணிக்கை | 2013 இற்கான அறவீடு |
|---|---|---|
| திருகோணமலை பட்டினமும் சூழலும் | 02 | 500.00 |
| பதவிஸ்ரீபுர | - | - |
| கந்தளாய் | 02 | 500.00 |
| தம்பலகாமம் | - | - |
| குச்சவெளி | - | - |
| மொறவெவ | 01 | 250.00 |
| மூதூர் | 02 | 500.00 |
| **மொத்தம்** | **07** | **1750.00** |

## வெடிமருந்து அனுமதி பத்திர புதுப்பித்தல்

| பிரதேச செயலகங்களின் பெயர் | கட்டிட கற்கள் எடுப்போர் எண்ணிக்கை | 2013 இற்கான அறவீடு |
|---|---|---|
| திருகோணமலை பட்டினமும் சூழலும் | 21 | 5,250.00 |
| கந்தளாய் | 21 | 5,250.00 |
| மூதூர் | 04 | 1,000.00 |
| தம்பலகாமம் | 07 | 1,750.00 |
| சேருவில | - | - |
| கோமறங்கடவெல | 02 | 500.00 |
| மொறவெவ | 01 | 250.00 |
| குச்சவெளி | 02 | 500.00 |
| **மொத்தம்** | **58** | **14,500.00** |

## 7.1.2. பிரதேச பதிவு செய்தல் நடவடிக்கைகள்

நேர் அமைச்சுக்களாலும், திணைக்களங்களாலும் பிரதேச பொது நிர்வாகத்தை பலப்படுத்துவதற்கான இணைப்புச் செய்யப்பட்ட குடிசார் பதிவுச் சேவைகள் பிரதேச செயலகங்களினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எமது பதினொரு பிரதேச செயலகங்கள் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையின் படி இந்தச் சேவைகளை வழங்கி வருகின்றன.

| பிரதேச செயலக பிரிவு | தே.அ.அ | பிறப்புச் சான்றிதழ் | இறப்புச் சான்றிதழ் | விவாகச் சான்றிதழ் | கடவுச்சீட்டு | வருமான சான்றிதழ் | வாகனப் பதிவு |
|---|---|---|---|---|---|---|---|
| திருகோணமலை பட்டினமும் சூழலும் | - | 4168 | 518 | 618 | - | 175 | - |
| பதவிஸ்ரீபுர | 229 | - | - | - | - | 29 | 1119 |
| கோமரன்கடவெல | 254 | 42 | 17 | 56 | 12 | 13 | 913 |
| கிண்ணியா | 1542 | 11105 | 117 | 1035 | NA | 7 | 7025 |
| சேருவில | 19 | 3 | 5 | 6 | NA | NA | |
| மூதூர் | 1185 | - | - | - | - | - | 4704 |
| கந்தளாய் | 1454 | 6090 | 236 | 1167 | - | - | 8676 |
| குச்சவெளி | 939 | 49 | 5 | - | 5 | 10 | - |
| மொறவெவ | 205 | 47 | 26 | 53 | - | - | 800 |
| தம்பலகாமம் | 1132 | - | - | - | - | - | 3694 |
| வெருகல் | 832 | 78 | 29 | 103 | - | - | - |

## 7.1.3. ஓய்வூதியக் கொடுப்பனவு விபரங்கள் - 2013

திருகோணமலை மாவட்ட ஓய்வூதியக் கொடுப்பனவு திட்டத்தை ஒழுங்குபடுத்தல் மாவட்டத்தின் மூத்த பிரஜைகளுக்கு வழங்குகின்ற பொதுமக்கள் சேவைகளில் ஒன்றாகும். இது பதினொரு பிரதேச செயலகங்களையும் ஒன்றிணைத்து நிறைவேற்றப்படுகின்றது. இத்திட்டத்தை இணைப்புச் செய்வதற்கு ஒரேயொரு ஓய்வூதிய உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளார். பிரதேச செயலகங்களில் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையாக இருப்பதால் ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் உதவுவதற்காக மாவட்ட ஓய்வூதிய உத்தியோகத்தர் பணியாற்றுகின்றார். 2013 ம் ஆண்டின் ஓய்வூதிய கொடுப்பனவு விபரம் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

## ஓய்வூதியக் கொடுப்பனவு விபரங்கள் - 2013

| தொ.இல | (1) | கட்டுநிதியூடாக - தபாற்கந்தோர் ஊடாக(1) | | கட்டுநிதியூடாக - வங்கியூடாக(2) | | ஓய்வூதியத்தாரர்களின் வகைகள் (3) | | | | | | தொகை (4) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ஓய்வூதிய தாரர்களின் எண்ணிக்கை (i) | தொகை(ரூபா) (ii) | ஓய்வூதிய தாரர்களின் எண்ணிக்கை (i) | தொகை (ரூபா) (ii) | குடிசார் (i) | குடிசார் விதவைகள் (ii) | படையனியினர் (iii) | படையினர் விதவைகள் (iv) | அநாதைகள் (v) | ஊனமுற்ற படையினர் (vi) | 3(i)+3(ii)+3(ii)+3(iv) +3(v)+3(vi) |
| 1 | திருகோணமலை பட்டினமும் சூழலும் | 111 | 1,508,453.02 | 3081 | 48,770,269.15 | 2047 | 952 | 156 | 31 | 2 | 4 | 3192 |
| 2 | பதவிஸ்ரீபுர | 0 | 0 | 136 | 2,046,554.45 | 32 | 40 | 57 | 7 | 0 | 0 | 136 |
| 3 | கோமரன்கடவெல | | 0 | 133 | 1,974,814.12 | 46 | 13 | 27 | 45 | 1 | 0 | 133 |
| 4 | கிண்ணியா | 63 | 982,753.81 | 331 | 6,666,832.11 | 265 | 117 | 6 | 0 | 5 | 1 | 394 |
| 5 | சேருவில | 1 | 12,013.90 | 105 | 1,648,357.56 | 61 | 32 | 13 | 0 | 0 | 0 | 106 |
| 6 | மூதூர் | 127 | 2,196,752.99 | 268 | 4,693,472.75 | 237 | 148 | 0 | 5 | 5 | 1 | 395 |
| 7 | கந்தளாய் | 135 | 1,647,957.91 | 625 | 11,249,239.57 | 276 | 160 | 161 | 139 | 10 | 14 | 760 |
| 8 | குச்சவெளி | 7 | 95,069.66 | 82 | 941927.05 | 31 | 12 | 4 | 28 | 7 | 7 | 89 |
| 9 | மொறவெவ | 43 | 593,676.97 | 54 | 935,837.530 | 45 | 51 | 1 | 0 | 0 | 0 | 97 |
| 10 | தம்பலகாமம் | 65 | 859,390.17 | 151 | 2,573,537.96 | 87 | 68 | 39 | 0 | 22 | 0 | 216 |
| 11 | வெருகல் | 3 | 38186.8 | 9 | 131967.84 | 6 | 5 | 1 | 0 | 0 | 0 | 12 |
| | தொகை | **555** | **7,934,255.23** | **4975** | **81,632,810.09** | **3133** | **1598** | **465** | **255** | **52** | **27** | **5530** |

## 7.1.4. மனிதவள தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகள்

திருகோணமலை மாவட்ட திறன் அபிவிருத்தி அலகு மாவட்டசெயலக வளாகத்தில் 2013 ம் ஆண்டில் அமைக்கப்பட்டு மாவட்ட செயலகம் மற்றும் எல்லா பிரதேச செயலகங்களில் பணிபுரியும் முகாமைத்துவ உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டு வருகின்றது. இந்த நிலையம் ஆரம்பிக்க முன்னர் உத்தியோகத்தர்கள் பல கஷ்டங்களின் மத்தியில் ஒவ்வொரு பயிற்சி நெறி தேவைகளுக்காக கொழும்பிற்குச் செல்ல வேண்டி இருந்தது. மாவட்ட செயலாளரின் மேற்பார்வையின் கீழ் தற்போது திறன் அபிவிருத்தி அலகு செயற்பட்டு வருவதால் திருகோணமலை அரச உத்தியோகத்தர்கள் தமது நாளாந்த வேலைகளுக்குத் தேவையான பயிற்சி நெறித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. திருகோணமலை மாவட்ட திறன் அபிவிருத்தி அலகில் 2013 இல் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளின் சுருக்கம் கீழே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

| | கருத்திட்டம் | மொழி மூலம்/திகதி | பங்குபற்றுனர் | செலவினம் |
|---|---|---|---|---|
| 1 | (CIGAS)பயிற்சிப் பட்டறை | சிங்களம்/தமிழ் 2013-10-07, 09, 2013-10-10, 12 | 40 அரச முகாமைத்துவ உதவியாளர்கள் பிரதேச செயலகங்களிலிருந்து | 28,800.00 |
| 2 | மின்னஞ்சல் மற்றும் இணையப் பாவனை பயிற்சிப் பட்டறை | சிங்களம்/தமிழ் 2013-05-14 2013-11-22 | 35 அரச முகாமைத்துவ உதவியாளர்கள் பிரதேச செயலகங்களிலிருந்து | 13,690.00 |
| 3 | Photo Shop பயிற்சிப் பட்டறை | சிங்களம்/தமிழ் 2013-11-22 2013-12-05 | 40 அரச முகாமைத்துவ உதவியாளர்கள் பிரதேச செயலகங்களிலிருந்து | 26,800.00 |
| 4 | Windows 08 பயிற்சிப் பட்டறை | சிங்களம்/தமிழ் 2013-06-12 - 18 | 34 அரச முகாமைத்துவ உதவியாளர்கள் பிரதேச செயலகங்களிலிருந்து | 17,495.00 |
| 5 | Advance MS Office அடிப்படை கணணி அறிவு பயிற்சிப் பட்டறை | சிங்களம்/தமிழ் 2012-06-27,28,29 | 25 அரச முகாமைத்துவ உதவியாளர்கள் பிரதேச செயலகங்களிலிருந்து | 24,400.00 |

## 7.1.5. காணி நிர்வாகம்

திருகோணமலை மாவட்ட செயலாளரின் மேற்பார்வையின் கீழ் செயற்படும் பிரதி காணி ஆணையாளர் அலுவலகத்தால் காணி நிர்வாகம் மேற்கொள்ளப்படுகின்றது. பிரதேச செயலகங்களில் உள்ள பிரதேச காணி கிளைகளையும் ஒன்பது colony பிரிவுகளுடன் தொடர்புபடும் காணி விடயங்களும் பிரதி காணி ஆணையாளரினால் நிர்வகிக்கப்படுகின்றது. பிரதி காணி ஆணையாளரது பிரதான செயற்பாடுகளாக ஜெயபூமியின் கீழ் உறுதிகளை வழங்கல், ரண்பிம நிகழ்ச்சித்திட்டம், காணி உறுதிகளை வழங்குதல், விவசாய காணிகளுக்கான நீண்டகால குத்தகை உறுதிகளை வழங்குதல் போன்றவற்றை ஒருங்கிணைத்தல் போன்றவையாக காணப்படுகின்றது.

**04/2008 சுற்றறிக்கையின் கீழ் காணி உறுதிகள் வழங்குவதற்காக பிரதி காணி ஆணையாளர் அலுவலகத்தில் காணிக் கச்சேரிகள் நடாத்தப்பட்டுள்ளன.**

| **குடியேற்ற பிரிவுகள்** | **திகதி** | **LDO இனால் வழங்கப்பட்ட உறுதிகள்** | **நீண்ட கால உறுதிகள்** |
|---|---|---|---|
| தம்பலகாமம் மேற்கு | 2013-08-26, 27 | 79 | - |
| முள்ளிப்பொத்தானை | 2013-08-15,16,17 | 124 | - |
| மகாடிவுல்வெவ | 2013-04-09,23 | 129 | 35 |
| கல்யாணபுர | 2013-08-06 | 14 | - |
| மூதூர் | 2013-12-17 | 48 | - |
| சேருவில | 2013-10-25 | 116 | - |
| **மொத்தம்** | | **510** | **35** |

"தேசத்திற்கு மகுடம் 2013" இற்கு முன், பிரதி காணி ஆணையாளர் அலுவலகத்தினால் 2013 இல் காணிப் பிரச்சனைகளைத் தீர்ப்பதை நோக்காக கொண்டு ஒரு பிரதேச செயலகத்தில் காணி நடமாடும் சேவைகள் நடாத்தப்பட்டது.

| **பிரதேச செயலக பிரிவு** | **காணி சம்மந்தமான பிரச்சினைகளின் எண்ணிக்கை** | **தீர்க்கப்பட்ட பிரச்சினைகள்** | | **வேறு திணைக்களங்களுக்கு மாற்றப்பட்ட பிரச்சினைகள்** | **தீர்க்கப்படாத பிரச்சினைகள்** | |
|---|---|---|---|---|---|---|
| | | **உத்தரவுப் பத்திரம்** | **அளிப்பு** | | **உத்தரவுப் பத்திரம்** | **அளிப்பு** |
| மொறவெவ | 15 | 05 | 02 | 02 | 04 | 02 |
| **தொகை** | **15** | **05** | **02** | **03** | **62** | **13** |

### 7.1.6. இடர் முகாமைத்துவ செயற்பாடுகள்

மாவட்ட இடர்முகாமைத்துவ ஒருங்கிணைப்பு அலுவலகமானது(DDMCU) திருகோணமலை மாவட்ட இடர்முகாமைத்துவத்திற்கான முக்கிய அரச அலுவலகமாகும். இதன் அடிப்படை கருமங்களாக இடர் தொடர்பான அறிவுரைகள், வழிநடத்தல்களை பெற்றுக்கொடுத்தலும், மாவட்டத்திலே ஏற்படக்கூடிய இடர் நிலைமைகளை அறியப்படுத்தி, நிவாரண நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தலும் வழிப்படுத்தலும் ஆகும்.

2013 ம் ஆண்டில் திருகோணமலை மாவட்ட இடர்முகாமைத்துவ அமைப்பினால், திட்டமிட்ட நிகழ்ச்சிகளை நடைமுறைப்படுத்துவதற்கும், காலத்திற்கு ஏற்ப இடரை அறியத்தருவதிலும், நிவாரண முன்வைப்பதற்கும் முடிந்துள்ளது. தெரிவு செய்யப்பட்ட பிரதேசசெயலாளர் பிரிவிற்குள் இடர்முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டது. திருகோணமலை மாவட்ட இடர்முகாமைத்துவ அமைப்புடன் தொடர்புபட்ட உத்தியோகத்தர்களும், முப்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களும் வளவாளர்களாக பங்குபற்றினர்.

| தொ.இல | செயற்பாடுகள் | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | நடைபெறும் இடமும் பங்குபற்றுனர்களும் | செலவீனம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01. விழிப்புணர்வூட்டும் பயிற்சிப் பட்டறை – நிகழ்ச்சியாளர்கள் | மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் | 01 | திருகோணமலை மாவட்ட செயலகம் கச்சேரி திருகோணமலை | 10,000.00 |
| | மாவட்ட அலுவலகர்கள், மாகாண அலுவலகர்கள். பாடசாலை ஆசிரியர்கள். மற்றும் பாடசாலை தொண்டர் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சி | 01 | திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களான - பட்டிணமும் சூழலும், தம்பலகாமம் ,மற்றும் கந்தளாய் பேராறு பரமேஸ்வரா மகா வித்தியாலயம் | 18,000.00, 32,760.00, 27,500.00, 42,000.00 |
| | முகாமைத்துவ நிகழ்ச்சி அலுவலர்களுக்கான முகாம் மற்றும் முதலுதவி | 03 | பிரதேச செயலகம் பட்டிணமும் சூழலும் ( குளக்கோட்டன் மண்டபம்) இளைஞர் மன்றம் திருகோணமலை | 53,910.00 |
| | இளைஞர் சேவைபடைக்கான நிகழ்ச்சித்திட்ட அலுவலர் | 01 | இளைஞர் படைமையம் திருகோணமலை | 20,000.00 |
| 02. நிகழ்ச்சியாளர்களின் திட்டங்களும் தயாரிப்புக்களும் | சுனாமி உடற்பயிற்சி | 11 | பிரதேச செயலகங்கள் . குச்சவெளி ,பட்டிணமும் சூழலும் வெருகல், மூதூர் , கிண்ணியா | 98,700.00 |
| | கிராமமட்டத்தில் மாவட்ட மட்ட மீளாய்வுக் கூட்டத்திலிருந்து மாவட்ட முகாமைத்துவ குழுகூட்டத்திற்கு தயார்படுத்தல் | 05 | பிரதேச செயலகங்கள் . ,பட்டிணமும் சூழலும் .மொரவெவ | 18,700.00 |
| | பிரதேச மட்ட குழுக்கூட்டம் | 04 | பிரதேச செயலகங்கள் . ,பட்டிணமும் சூழலும் .மொரவெவ, கோமரங்கடவல , பதவிஸ்ரீபுர | 63,970.00 |
| | தேசிய சுனாமி நிகழ்ச்சி உடற்பயிற்சித் திட்டம் | 02 | பிரதேச செயலகங்கள் . ,பட்டிணமும் சூழலும், குச்சவெளி | 20,000.00 |
| | எல்லை நிர்ணயத்தைக் குறைத்தல் | - | கந்தளாய்குளம்,மகாவலி ஆறு கிண்ணியா , ஆண்டாங்குளம் | 20,000.00 |
| 03. புனர்நிர்மாணத் திட்டங்கள் | பூமான்குளத்திட்டம் - தபரசோமாகவத்த பிரதேச கல்வெட்டுக்களை(தாம்போதிகளை) துப்பரவாக்கல் , கந்தளாய்குள அணை புனருத்தாரணம் | | பிரதேச செயலகம் மூதூர்<br>பிரதேச செயலகம், ,பட்டிணமும் சூழலும்<br>பிரதேச செயலகம்,கந்தளாய் | 500,000.00<br>300,000.00<br>292,632.00 |

### 7.1.7. மாவட்ட புள்ளிவிபரவியல் கிளையின் செயற்பாடுகள்

மாவட்ட புள்ளிவிபரப்பிரிவின் மாவட்ட மட்ட பிரதிநிதிகளாக புள்ளி விபரத்திணைக்களம் மற்றும் புள்ளிவிபரம் அடிப்படையிலான வழமையான நடவடிக்கைகள் மூலம் ஆய்வு செய்தல் மற்றும் காலத்திற்கு காலம் தரவுகளைச்சேகரித்தல் புள்ளிவிபரப்பிரிவு மற்றும் பொதுவேலைகள் விசேடவேலைத்திட்டங்களை நடத்துதல் மாவட்ட புள்ளிவிபரவியலாளர், புள்ளிவிபரஉதவியாளர், புள்ளிவிபரஅலுவலர், மற்றும் கணணி தரவு இயக்குனர்கள் யாவும் இப்பிரிவின் மனித வளங்களாகும்.
கீழ்வருவன பொதுவான வேலைகளாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

01. LPAP :- உள்ளூர் பொருட்களின் உற்பத்தியாளர்களின் விலைகளான விவசாயம் மீன்பிடி கால்நடைவளர்ப்பு சம்பந்தமான தகவல்களை ஒவ்வொரு மாதத்தின் இரண்டாவது கிழமைகளில் சேகரித்தல்.
02. விலைப்பட்டியல் சேகரித்தல் :- திறந்த சந்தையிலிருந்து ஐந்து வகையான விலைகளைச்சேகரித்தல். அவையாவன குழு I , குழு I A , குழு II, குழு III மற்றும் சதொச கூட்டுறவுச்சங்கம் மற்றும் ஏனைய ஏதாவதொரு திறந்த சந்தை.

03. விவசாய புள்ளிவிபரம் :- மேட்டுநிலங்களின் மகாபோகம் சிறுபோகங்களில் தானிய வகைகளின் விளைச்சல் பற்றிய தகவல்களைச்சேகரித்தல்
04. வயல் நிலங்களின் புள்ளிவிபரம் :- வயல்நிலங்களில் மகாபோகம் சிறுபோகங்களில் பயிர்ச்செய்கையின் விளைச்சல் பற்றி தகவல்களை மாவட்டத்தின் **22** கமநல சேவை நிலையங்களூடாக தகவல்களைச் சேகரித்தல்
05. விளைச்சல் பற்றிய மதிப்பீடு :- தகவல் சேகரித்தல் நெல் விளைச்சல் மகா போகம் சிறு போகம் ஆகியவற்றில் கிடைக்கப்படும் விளைச்சலை உத்தியோகத்தர்கள் மூலம் அளவிடல்
06. கால்நடை பற்றிய புள்ளிவிபரம் :- யூன் மாதத்திலிருந்து யூலை மாதம் வரையான காலப்பகுதியில் ஒவ்வொரு பிரதேச செயலகங்களூடாக கால் நடை பற்றிய விபரங்களைத்திரட்டல்.
07. இறைச்சிக்கடைகளின் புள்ளிவிபரம் :- இறைச்சிக்கடைகளின் விபரங்கள் பற்றி உள்ளூராட்சி அமைப்புகளான பிரதேச சபை நகரசபை போன்றவற்றிலிருந்து வருட இறுதியில் தகவல் சேகரித்தல்.
08. கட்டடங்களின் புள்ளிவிபரம் :- கட்டடங்கள் தொடர்பான தகவல்களைச்சேகரித்து அக்கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளுக்கான காணி அனுமதிப்பத்திரம் வழங்க நகராட்சிமன்றம் மற்றும் பிரதேசசபைகள்நடவடிக்கைஎடுக்கும்.

**2013 ஆண்டில் உள்ளடக்கப்பட்ட விசேட வேலைத்திட்டங்கள்**

1. பொருளாதார கணக்கெடுப்பு 2013/2014

இத்தகவல்களானது தொழிற்சாலை மற்றும் வர்த்தகம் மற்றும் சேவைகள் வழங்கும்நிறுவனங்களிலிருந்து பெறப்படுகின்றது. நாம் பின்வரும் படிவங்கள் ECL-ITS, ECL-S, ECL-GN,ECL-DS மற்றும் ECL-D,விநியோகிக்கின்றோம். அத்தோடு முன் திட்டமிடப்பட்ட அட்டவணை தயாரிக்கப்பட்ட அந்த ஒழுங்கிலே குறிப்பிட்ட இடங்களுக்கு சென்று தகவல்களைச சேகரிப்போம்.அதாவது வீடுகள் கடைகள் வியாபாரஸ்தாபனங்கள் ,நடமாடும் விற்பனையாளர்கள் மற்றும் சகல பொருளாதார செயற்பாடுகளுடனும் சம்பந்தபட்டவர்களுடனும் தொடர்புகளை ஏற்படுத்துவோம். இந்த சேவையினை ஒவ்வொரு பிரதேச செயலகங்களுடாகவும் புள்ளிவிபர உத்தியோகத்தர்கள் கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் புள்ளி விபரவியலாளர்களின் உதவியுடன் சேகரிக்கப்படுகின்றது. இதிலிருந்து 16577(பதினாராயிரத்து ஐநூற்றி எழுபத்தியேழு) தொழிற்சாலை வியாபாரம் மற்றும் சேவை வழங்கும் நிறுவனங்கள் காணப்படுகின்றன.

2. LLRC (கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு )

திருகோணமலை மாவட்ட முழுவதிலும் இருந்தும் தகவல்களைச்சேகரிக்கின்றோம். 1982 பிந்திய காலப்பகுதியிலிருந்து L1,L2 படிவங்களை விநியோகித்தல் மற்றும் இறப்புக்கள் பற்றிய விபரம் காணாமல் போனோர் பற்றிய விபரம் வீடுபாதிப்படைதல் பற்றிய விபரங்களைச்சேகரித்தல் இவ்வேலைத்திட்டங்கள் பிரதேச செயலகங்களூடாக புள்ளிவிபரவியல் உத்தியோகத்தர் கிராம சேவகர் உத்தியோகத்தர் மற்றும் ஏனைய உத்தியோகத்தரின் உதவியுடன் முன்னெடுக்கப்படுகின்றது,

## 7.1.8. மாவட்ட மோட்டார் வாகன அலுவலகம்

மாவட்ட மோட்டார் வாகன அலுவலகம் மோட்டார் வாகன திணைக்களத்தினை பிரதிநிதிப்படுத்தும் வகையில் சாரதி அனுமதிப்பத்திரத்திற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதும், சாரதி அனுமதிப்பத்திரங்களை புதுப்பித்தலும்,வழங்குதலும் வாகன இலக்கத்தட்டினை வழங்குதலும், வாகன விபத்து அறிக்கைகளை தயாரித்தலும், வாகனங்களின் எடை சான்றிதழ்களை வழங்குதலும், வாகன உரிமைச்சான்றிதழ்களை வழங்குதலும் ஆகிய சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றது. கீழே காணப்படுகின்ற அட்டவணையானது 2013 இற்குள் நடாத்தப்பட்ட சேவைகளின் சாராம்சத்தை முன் வைக்கின்றது. அது போல் திருகோணமலை மாவட்டத்துக்குள் நடைமுறையிலிருக்கும் 7 சாரதிப் பாடசாலைகளையும் கண்காணித்து வருகின்றது

| புதிய சாரதி அனுமதி பத்திரம் | புதுப்பிக்கப்பட்ட சாரதி அனுமதி பத்திரம் | வழங்கப்பட்ட வாகன இலக்கத்தட்டு | வாகன விபத்து அறிக்கை | வாகன எடை சான்றிதழ் | வாகன உரிமைச்சான்றிதழ் |
|---|---|---|---|---|---|
| 7461 | 1726 | 2388 | 191 | 85 | 109 |

## 7.1.9. அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் கிளை (MUSSD)

அளவீட்டு நியமங்கள் மற்றும் அளவுடன் தொடர்புபட்ட வியாபார நடவடிக்கைகளுடன் தொடர்பான சேவைகளை வழங்குகின்ற அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் மாவட்ட காரியாலயம் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நிறுவப்பட்டுள்ளது. தராசுகள் தொடர்பான அனுமதிகளை வழங்குதல், தராசுகளுக்கு அச்சிடுதல், தவறிழைக்கின்ற வியாபாரிகளுக்கெதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காணப்படுகின்ற உபகரணங்களைப் பரிசோதனை செய்தல், வியாபாரிகளை கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகள் இக்கிளையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

| செயற்பாடுகள் | நோக்கம் | பயனாளிகள் | குறிப்பு |
|---|---|---|---|
| தராசுகளை புதுப்பித்தலும், முத்திரை புதுப்பித்தலும் | வியாபாரிகள் பாவிக்கும் தராசுகளின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்தல் | பொது மற்றும் சில்லறை வியாபாரிகள், ஆடை வியாபாரிகள், மில், தங்க வியாபாரிகள், எரிபொருள் நிலையங்கள் | தராசுகளின் தொழில்நுட்பம், இயந்திரக்கோளாறுகளை அகற்றி 2941 தராசுகளுக்கு முத்திரை பொறிக்கப்பட்டது. |
| எரிபொருள் நிலையங்களை கண்காணித்தல் | எரிபொருள் நிலையங்களிலே பாவிக்கப்படும் அளவீட்டு உபகரணங்களின் உண்மைத்தன்மையை உறதிசெய்தல் | எரிபொருள் நிலையங்கள்/எரிபொருள் பெற்றக்கொள்ளளும் நுகர்வோர். | பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் 26 நிலையங்களையும், குழாய்கள் 91 ம்,IOC நிறுவனத்தின்எரிபொருள் நிலையங்கள் 6 ம் , குழாய்கள் 19 ம் பரிசோதனையும் க்குட்படுத்தப்பட்டது. |
| பரிசோதனையும் அதன் உபகரண பரிசோதனையும் | செய்யப்பட்ட பரிசோதனை சரியான முறையில் செய்யப்பட்டதா என்பதை உறுதி செய்தல் | மாவட்டத்தின் வாகன உரிமையாளர்கள் ( தனியார், நிறுவனம் ) | நிலையான இடங்கள் 2 ம் நடமாடும் இடங்கள் 2 ம் ஆக 4 இடங்கள் பரிசோதனை செய்யப்பட்டது. |
| சட்டத்திற்கு முரணான வியாபார நடவடிக்கைகளை கண்டுபிடிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் | நியாயமான வியாபாரம் ஒன்றிற்காக சட்டத்திற்கு புறம்பான வியாபார நடவடிக்கைகளை அகற்றுதல் | பொது மற்றும் சில்லறை வியாபாரிகள், ஆடை வியாபாரிகள், மில், தங்க வியாபாரிகள், எரிபொருள் நிலையங்கள் | சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வியாபார சட்டத்தை மீறிய வியாபாரிகள் 31 பேருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டு ரூபா. 67,950.00 அறவிடப்பட்டது. |
| விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் | நேர்மையாக வியாபாரம் செய்யும் முறை பற்றிதெரியப்படுத்தலும் அளவீட்டுப்பிரிவு நியமம் மற்றும் சேவைகள் பரிவினரால் ஆற்றப்படுத்தப்படம் சேவைகள் பற்றியும் தெரியப்படுத்தல். | வர்த்தகர்கள் பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள். | திருகோணமலை மாவட்ட வர்த்தக சம்மேளனத்தினரின் கருத்தரங்குகளை ஒழுங்கு படுத்தல் கையேடு சிறு வியாபாரச்சொத்துக்களை பொதுமக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு விநியோகித்தல் |

## 7.1.10. மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள் கிளை

நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகள் திருகோணமலை அரச அதிபர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படுகின்றது.இக் கிளையின் முக்கிய கடமையாக பாவனையாளர் சட்டங்களை நடைமுறைப்படுத்தலும், அதனைக் கண்காணித்தலும். பாவனையாளர் அதிகாரசபையினால் வழங்கப்படுகின்ற அறிவுறுத்தல்களுக்கும், வழிநடத்தல்களுக்கும் ஏற்ப கடமையை மேற்கொண்டு வருகின்றது. கூடிய விலைக்கு விற்றல், காலாவதியாகிய திகதி / குறீயிட்டு இலக்கம் / சில்லறை விலை போன்றவை குறிப்பிடப்படாமை, பொதி செய்யப்பட்ட பொருட்களுக்கான சின்னம் காணப்படாமை, விலைப்பட்டியல் பார்வைக்கு வைக்கப்படாமை, பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படாமை, தவறான முறையில் மக்களை இட்டுச் செல்லும் சிறிய வியாபார நடவடிக்கைகள் முதலியவற்றை கண்டுபிடிக்க பரிசோதனை நடாத்தி குற்றங்களுக்கான தண்டப்பணங்களை அறவிடுதல். 2013 ம் ஆண்டிற்கான பரிசோதனை நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது. பாவணையாளர் சங்கங்களை நிறுவுதல், பாடசாலை சிறுவர்கள் மற்றும் பொது மக்களை அறிவூட்டுதல் 2013 ம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

| மாதம் | சோதனைகளின் எண்ணிக்கை | தண்டப்பணம் (ரூபா) |
|---|---|---|
| தை | 54 | 132,500.00 |
| மாசி | 50 | 106,500.00 |
| பங்குனி | 40 | 105,200.00 |
| சித்திரை | 50 | 75.200.00 |
| வைகாசி | 72 | 193,050.00 |
| ஆனி | 72 | 217,800.00 |
| ஆடி | 40 | 117,700.00 |
| ஆவணி | 36 | 109,200.00 |
| புரட்டாதி | 40 | 143,200.00 |
| ஐப்பசி | 38 | 167,200.00 |
| கார்த்திகை | 38 | 149,300.00 |
| மார்கழி | 44 | 112,400.00 |
| **மொத்தம்** | **574** | **1,629,250.00** |

## 7.2. சமூகசேவைகள் மற்றும் கலாச்சார நடவடிக்கைகளின் முன்னேற்றம்

### 7.2.1. கலாச்சார மற்றும் மத நடவடிக்கைகள்

கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தினை பிரதிநிதிப்படுத்தும் வகையில் மாவட்ட கலாச்சார அலுவலகமானது மாவட்ட மட்டத்தில் கலாச்சார நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மாகாண மற்றும் பிரதேச ரீதியாக முக்கிய கலாச்சார நிகழ்ச்சிகளை மாவட்டத்திற்குள் ஒழுங்கமைத்து நடாத்துகின்றது.

2013 ம் ஆண்டிற்காக மாவட்ட கலாச்சார அலுவலகமானது மாவட்ட மற்றும் பிரதேச கலாச்சார நிலையங்களை நிர்மாணித்து மாகாண, பிரதேச, அரச நிறுவனங்களுடன் ஒன்று சேர்ந்து கலாசார நிகழ்வுகளையும், போட்டிகளையும் ஒழுங்கமைத்து நடாத்தியுள்ளது. ஆறு பாடசாலைகளின் பங்குபற்றலுடன் விசேட கலாச்சார நிகழ்வுகள் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்டன.

2013ம் ஆண்டில் மாவட்ட கலாச்சார அலகும், பட்டணமும் சூழலும் பிரதேச செயலகமும் இணைந்து ஐப்பசி மாதம் 29ம் திகதி தொடக்கம் 31 ம் திகதி வரையும் உணவு வலுவூட்டல் விழா ஒன்றினை ஏற்பாடு செய்திருந்தது. பிரதேச மட்டத்தில் பரந்து காணப்படுகின்ற சம்பிரதாயமான உணவு வகைகளை தயாரித்தலில் தேர்ச்சி பெற்றிருந்தவர்களை தெரிவு செய்து அவர்களால் தயாரிக்கப்பட்ட உணவுகளை மக்களுக்கு காட்சிப்படுத்துவதன் ஊடாக பாரம்பரிய உணவினை வலுவூட்டும் செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது.

அதேபோல் கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலின்படி இலக்கிய விழாவானது 2013ம் ஆண்டு மார்கழி மாதம் 5ம் திகதி நடாத்தப்பட்டது. விழாவிற்கு முன்பதாக 2013ம் ஆண்டு பங்குனி மாதம் முதல் ஆனி மாதம் வரையான காலப்பகுதியில் இலக்கிய ஆக்கப் போட்டிகள் பிரதேச மட்டத்தில் நடாத்தப்பட்டது. ஆசிரிய விரிவுரையாளர்கள் மற்றும் பிரசித்தி பெற்ற இலக்கிய வாதிகளின் ஒத்துழைப்புடன் வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவ்விழாவிற்காக ரூபா 33,550/= செலவு செய்யப்பட்டது.

அதுபோல் இஸ்லாமிய பள்ளிவாசல் கிறிஸ்தவ தேவாலயங்கள் மற்றும் இந்து ஆலயங்கள் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக கிடைக்கப் பெற்றிருந்த ரூபா 17,510,649.01 செலவு செய்யப்பட்டு அதன் புனரமைப்பு நடவடிக்கைகளும் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டது.

### 7.2.2 சமூக சேவைகள் நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள்

பொது மக்களுக்காக மத்திய அரசும், மாகாண சபையும் மற்றும் வேறு அமைப்புக்களின் மூலமாகவும் அதிகளவு சமூக சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறான சமூகசேவை நடவடிக்கைகள் பிரதேச வாரியாக ஒருங்கிணைப்புச் செய்யப்பட்டு பிரதேச செயலகங்கள் ஊடாக நடைபெற்று வருகின்றன. பிரதேச செயலகங்கள் சமூக சேவைத்திணைக்களத்தின் ஊடாக தேவையின் அடிப்படையில் நிவாரண நடவடிக்கைகளை தொடர்ந்தும் பாதிப்புக்குள்ளான மக்களுக்கு செய்து வருகின்றன.

**பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பொதுமக்கள் நலன்புரி கொடுப்பனவுகள்-2013**

| பிரதேச செயலக பிரிவு | அமைய உதவி | பொதுமக்கள் நன்கொடை மாதாந்த கொடுப்பனவு | சுயதொழில் | 70 வயதிற்கு மேற்பட்டோருக்கான கொடுப்பனவு | உடல்,உள ரீதியாக வலுவிழந்தோர் | வீட்டுத்திட்டம் - வலுவிழந்தோர் | வலுவிழந்தோருக்கான உபகரணம் | ஜனாதிபதி நிதியம் | கல்வி நன்கொடை | வலுவிழந்தோருக்கான கொடுப்பனவு | காசநோய் | புற்றுநோய் | குஷ்டரோகம் | சிறுநீரக நோய் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திருகோணமலை பட்டினமும் சூழலும் | 12 | 1348 | 42 | 838 | - | 01 | 25 | - | - | 50 | 26 | 43 | 03 | 04 |
| பதவிஸ்ரீபுர | 160 | 703 | - | 50 | - | - | - | - | - | - | 1 | 5 | 1 | 68 |
| கோமரன்கடவெல | - | 218 | 6 | 56 | - | - | 3 | - | - | 16 | - | - | - | - |
| கிண்ணியா | 31 | - | 23 | 762 | 1 | - | - | - | - | 50 | - | - | - | - |
| சேருவில | 32 | 7489 | 11 | 1792 | - | - | - | 600 | - | - | - | - | - | - |
| மூதூர் | 71 | 2243 | 48 | 519 | 4 | 1 | 32 | - | - | - | 8 | 27 | 4 | - |
| கந்தளாய் | 12 | 671 | 05 | 191 | 04 | - | - | 40 | - | - | 02 | 36 | - | 11 |
| குச்சவெளி | 41 | 800 | 43 | 390 | - | - | 4 | - | - | 50 | 7 | 17 | - | - |
| மொறவெவ | - | 153 | - | - | - | - | - | - | - | - | 4 | 1 | 1 | 4 |
| தம்பலகாமம் | 09 | 857 | 10 | 286 | 04 | - | 10 | - | - | 50 | 06 | 03 | - | 02 |
| வெருகல் | - | 3463 | - | 1359 | - | - | - | 588 | - | - | - | - | - | - |

### 7.2.3 நன்நடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கைகள்

நன்நடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு நடவடிக்கையில் மாவட்ட செயலகத்தின் சிறுவர் பிரிவு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட உத்தியோகத்தர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் மாவட்ட உத்தியோகத்தர்களை கொண்டிருக்கின்றது. சிறுவர் பிரிவானது மாவட்டத்தினூடாக சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பொறிமுறையினை பலமாக்கும் பொருட்டு பல்வேறு வகையான சிறுவர் பாதுகாப்பு மற்றும் சிறுவர் பெண்கள் தொடர்பான அபிவிருத்தி நடவடிக்கைகளை நடாத்தியுள்ளது. குறித்த உத்தியோகத்தர்கள் 2013 ம் நடாத்தப்பட்ட சிறுவர் அபிவிருத்தி நடவடிக்கைகள் பின்வருமாறு அமைந்துள்ளது.

